**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்குரிய உரிய கணக்கேடுகளை முறையாகப் பேணியுள்ளது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாட்டு நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 18 இன் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயங்களை மீள் மதிப்பு பெறுமதியில் கணக்குகளில் காட்டும் போது வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீள்மதிப்பு இலாபமாகிய ரூபா 1,629,300 தொகை மீள்மதிப்பு ஒதுக்கத்தின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் ஒதுக்க நிதியத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் வருமானங்கள் மற்றும் செலவுகள் தனித்தனியாகக் காட்டப்படவேண்டிய போதிலும் செயலமர்விலிருந்து பெற்றுக்கொண்ட முறையே ரூபா 53,000 மற்றும் ரூபா 59,660 தொகையான வருமானங்களும் செலவுகளும் தனித்தனியாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக அதன் தேறிய விளைவாகிய ரூபா 6,660 இளைஞர் விஞ்ஞானிகள் சங்கத்தின் செயற்பாட்டுக் குழு செலவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ./ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் தொடர்பான சுற்றுநிருபம் | |
| 6.5.1 | வரைபு ஆண்டறிக்கையின் பிரதி ஒன்று கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 6.5.3 | 2008 ஆம் ஆண்டிற்கான கணக்குகளும் கணக்காய்வு அறிக்கையும் 2011 மார்ச் 10 ஆந் வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| 9.3.1 | ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

9.6 வருடாந்த சம்பள ஏற்றங்களை வழங்குவதற்காக செயலாற்றல் மதிப்பீடு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட இடர்கடன் தொகையில் மீள அறவிடப்பட்ட தவணைப்பணம் வைப்புச் செய்யப்பட்டு ரூபா 124,184 தொகையான இடர்கடன் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த சுழற்சி நிதியத்திற்காக பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்கான ரூபா 13,325,000 தொகையான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக் கொண்டதன் பின்னர் ஆணைக்குழுவின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 771,615 தொகையான மிகை காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகள் தொடர்பாக ரூபா 12,790,000 தொகையான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக்கொண்டதன் பின்னர் ரூபா 1,713,957 தொகையான பற்றாக்குறை காணப்பட்டது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்ட மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 2,485,572 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

(அ) 2010 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

| செயற்பாட்டுத் திட்டத்தின் விடய இலக்கம் | இலக்கு | செயற்பாடு |
| --- | --- | --- |
| 01 | கொள்கைகள் உருவாக்கப்பட்டு அறிக்கை ஒன்று சமர்ப்பித்தல் | தரவுகளைச் சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. |
| 02 | கடந்த 05 ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வு அறிக்கை ஒன்று தயாரித்தல் | 2006 - 2008 ஆம் ஆண்டுகளுக்குரிய மீளாய்வு மாத்திரம் இடம்பெற்றிருந்தது. |
| 03 | 03 நிறுவனங்களின் செயல் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல் | 02 நிறுவனங்களுக்காக மாத்திரம் செயல் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டிருந்தது. |

(ஆ) கொள்கை தொடர்பான விடயங்கள் மற்றும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் பிரதான நியம கட்டளைக்காக உதவியளிக்கின்ற அடிப்படைக் குறிக்கோள்களை அமுல்ப்படுத்தப்பட வேண்டிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறையிலுள்ள தலைவர்களை உள்ளடக்கிய சிரேஸ்ட விஞ்ஞானிகளின் சங்கத்தின் செயலாற்றலானது பொதுச் சபை கூட்டத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ரூபா 40,000 கிரயமுள்ள அட்லாண்டிக் 24000 பீரீயூ வகையான குளிரூட்டி இயந்திரம் ஒன்று இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.2.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கொடுக்கல் வாங்கல் | தொகை | அவதானிப்பு |
|---|---|---|---|
| | | (ரூபா) | |
| (அ) | வாடகை வாகனம் | 34,783 | ஆகக் குறைந்தது 3000 கிலோமீற்றர்கள் ஓடுவதற்காக ரூபா 39,200 வாடகைக்குப் பெற்றுக்கொண்ட வாகனம் ஒன்றினால் செப்தெம்பர் மாதத்தின் போது ஓடிய மொத்த கிலோ மீற்றர்கள் 338 ஆக இருந்த போதிலும் வாடகை வாகனம் தொடர்பாகச் செலுத்திய ரூபா 34,783 தொகை சிக்கனமற்ற செலவாகக் காணப்பட்டது. |
| (ஆ) | ஹோட்டல் கட்டணம் | 96,050 | ஆறாவது இரண்டு ஆண்டு கருத்தரங்குகளுக்குப் பங்குபற்றாத அங்கத்தவர்களுக்காக அறைகளை ஒதுக்கீடு செய்ததன் காரணமாக ரூபா 96,050 தொகையான ஹோட்டல் கட்டணம் மிகையாகச் செலுத்த வேண்டிய ஏற்பட்டது. |
| (இ) | மொழிபெயர்ப்புக் கட்டணம் | 12,754 | தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கையினை இரண்டு முறை தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்வது தொடர்பாக ரூபா 12,754 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

### 2.2.4 கூட்டிணைந்த திட்டம்

நிறுவனத்தினால் 2008 - 2012 ஆம் ஆண்டுகள் தொடர்பாக கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது நிகழ்காலப் போக்கினை கருத்திற் கொண்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. தயாரிக்கப்பட்டிருந்த

கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த இலக்குகள் தரவு ரீதியாகக் காட்டப்பட்டிருக்காமையினால் செயலாற்றலினை மதிப்பீடு செய்யமுடியாதிருந்தது.

### 2.2.5 உள்ளகக் கணக்காய்வு

---

உரிய வரிசை அமைச்சின் உதவியுடன் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டின் போது பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகளுக்கிடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

(அ) செயலாற்றல்
(ஆ) கணக்கீடு
(இ) உள்ளகக் கணக்காய்வு
(ஈ) வாகனப் பயன்பாடு
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு